**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.88/2015**

Date: 28.01.2025.

PW– 15– மணிமாறன்

A4 present. A1, A2 produced on PT warrant. A5 died. A3, A6 called absent. Petition U/s..317 Cr.PC., filed and allowed.

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

19.10.2013 அன்று காவல்நிலையத்தில் நான் காலை முதல் இருந்தேன். அன்றைய தினம் உதவி ஆய்வாளர் பொறுப்பில் இருந்தது யார் என்று எனக்கு தற்போது நினைவில்லை. நான் காவல் நிலையத்தில் இருந்தபோது பழனிவேல் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை நான் வாங்கி படித்து பார்த்தேன். சம்பவ இடம் காவல்நிலையத்திலிருந்து 2 கி.மீ துாரத்தில் உள்ளது. மேற்படி நபர் என்னிடம் நேரில் ஆஜராகி புகார் கொடுக்கும் வரை சம்பவம் குறித்து எனக்கு தொலைபேசி மூலமோ, வேறு வகையிலோ தகவல் வந்ததா என்றால் தகவலும் வந்தது. அது எத்தனை மணி என்று எனக்கு நினைவில்லை.

முதலில் தகவல் கிடைத்ததை பொதுநாட்குறிப்பேட்டில் எழுதியுள்ளேனே என்று எனக்கு நினைவில்லை. முதலில் தகவல் கிடைத்ததை முதல்தகவல் அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் சி இல் முதலில் வந்த தகவலை பற்றி நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய எனக்கு 1 மணி நேரம் ஆனது. முதல் தகவல்அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் என்ற கலத்தில் தேதி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. யார் மூலம் அறிக்கை அனுப்பப்பட்ட விவரம் இல்லை.

புகாரில் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பு என்னால் எழுதப்படவில்லை. அதை வேறு நபர் எழுதியுள்ளார். தகவல் கிடைத்து நான் சம்பவ இடத்திற்கு நான் 3.00 மணிக்கு சென்றேன். நான் செல்வதற்கு முன்பே கிராமநிர்வாக அதிகாரியும், அவரது உதவியாளரும் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சென்ற பின்பு

தகவல் சொன்னபின்பு தான் அவர்கள் வந்தார்கள். கிராமநிர்வாக அலுவலகம் காவல் நிலையத்திலிருந்து சுமார் ½ கி.மீ தொலைவில் உள்ளது. நான் சென்ற பின்பு தான் கிராமநிர்வாக அதிகாரியை அழைத்தேன் என்பதற்கான குறிப்பும் எதுவும் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான்.

சம்பவ வீடு இரண்டு புறமும் வரிசையாக வீடுகள் உள்ள தெருபகுதி என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே மக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் ஒரு சிலர் இருந்தார்கள். சம்பவ இடத்தில் வாதி பழனிவேல் இருந்தார். சம்பவவீட்டிற்கு செல்வதற்கு முன்பு ஒரு சிறிய கேட் உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்டில் கேட் உள்ளது. அதை அடுத்து 5, 6 அடி தள்ளி வீட்டின் கதவு உள்ளது. சிறிய கேட்டிற்கு போடப்பட்ட பூட்டு இருந்ததா என்று பார்வைமகஜர் மற்றும் வரைபடத்தில் நான் சொல்லவில்லை.

தடயஅறிவியல் நிபுணர்களுக்கு காவல் நிலையத்தில் இருந்து நான் தகவல் சொல்லிவிட்டு சம்பவ இடம் சென்றேன். தடயஅறிவியல் நிபுணர்கள் நான் சம்பவ இடம் சென்று கால்மணிநேரம் கழித்து வந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த பின்பு பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டேன். தடயஅறிவியல் நிபுணர்கள் எடுத்த மாதிரிகளில் நான் விசாரித்தவரை எதிரிகளுக்கான தடயம் எதுவும் கிடைக்கவில்லை என்று சொன்னால் ஆமாம். தடயம் கிடைக்கப்பெற்றது. அதனால் தான் அவர்களை வழக்கில் சேர்த்தேன்.

எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக தடயஅறிவியல் நிபுணர்கள் கொடுத்த அறிக்கையில் நான் இருக்கும் வரை விவரம் எதுவும் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் அவரது அறிக்கை பின்பு தான் வந்துள்ளது. நான் இருக்கும் வரை தடயஅறிவியல் நிபுணர் அறிக்கை வரவில்லை. இந்த வழக்கில் தடயஅறிவியல் நிபுணர்கள் அறிக்கை எதுவும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரேதவிசாரணை அறிக்கை இரண்டும் சவக்கிடங்கில் வைத்து அன்று இரவு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிரேதவிசாரணை அறிக்கையில் கொலைக்கான காரணம் தெரியவரவில்லை என்றும், ஏதோ முன்விரோதம் இருக்கலாம் என்றும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.22 மற்றும் 25 பிரேதபரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தில் நான் கன்னங்குறிச்சி காவல்நிலையத்தில் 19.10.2013 அன்று மாலை 6.00 மணிக்கு அலுவலலில் இருந்தபோது புகார்தாரர் பழனிவேல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு மோப்பநாய் வரவழைக்கப்பட்டது. மோப்பநாய் சம்பவத்திற்கு வந்தது தொடர்பாக நான்இருந்த வரை அறிக்கை வந்துள்ளதா என்றால் ஆமாம். அந்த அறிக்கையில் வீட்டின் முன்வாசல் வழியாக வெளியேறி இடதுபுறம் திரும்பி சுமார் 30 மீ ஓடிசென்று இடதுபுறம் சென்று சுமார் 700 மீ பாலாஜி நகர் வழியாக ஓடிசென்று கன்னங்குறிச்சி மெயின்ரோடு சந்திப்பு அருகே விநாயாகபேங்கர்ஸ் அருகில் நாய் நின்றுவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது. விநாயகபேங்கர்ஸ் இறந்துபோன ராஜசேகர் மற்றும் ராமகிருஷ்ணனின் அடகு கடை என்றால் சரிதான்.

விநாயகபேங்கர்ஸ் கடைக்கு எந்த சேதமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மோப்ப நாய் அறிக்கை எனக்கு 19.10.2013 அன்று கிடைத்தது. 25 ஆம் தேதி வரை காயம்பட்ட ராஜாத்தி உடல்நிலை எவ்வாறு உள்ளது என்று மருத்துவர் யாரையும் கேட்டு நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. பிரேதபரிசோதனை முடிந்த பின்பு சம்பவம் நடந்த வீட்டை புகார்தாரர் பொறுப்பில் ஒப்படைத்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் பெரிய கும்பல் உள்ளது என்று சொன்னால் ஆமாம். புகார்தாரருக்கு தகவல் கொடுத்த நபரை நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த வீட்டின் மாடியில் குடியிருந்த கிரேசி என்ற பெண்ணை நான் விசாரித்தேன். புகார்தாரர் பழனிவேல் அவரது சகோதரியை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனை அனுப்பிவிட்டு அதன் பின்பு தான் என்னிடம் புகார் கொடுத்தார். பழனிவேல் புகார் கொடுப்பதற்கு சம்பவத்திலிருந்து கிளம்பும் முன்பே தகவல் தெரிந்து கன்னங்குறிச்சி போலிசார் சம்பவ இடம் வந்துவிட்டதாக என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

ராஜாத்தியை நான் முதல்முதலாக 25.10.2013 அன்று விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். 19.10.2013 முதல் 25.10.2013 வரை ராஜாத்தி மருத்துவமனையில் இருந்த காலத்தில் அவருக்கு சுயநினைவு வந்தால் மரண வாக்குமூலம் வாங்கும்படி மருத்துவருக்கு நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. தேவைப்படவில்லை அதனால் கொடுக்கவில்லை.

30.10.2013 அன்று கண்ணனை கைது செய்து வாக்குமூலம் பெற்ற பின்பு அதன் அடிப்படையில் தெரிந்த எதிரிகளின் வீட்டை சோதனை செய்தேனா என்றால் இல்லை. எதிரிகளை தான் தேடினோம். எதிரிகள் எனது வசம் இருந்ததால் தான் எதிரிகளின் வீட்டை சோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல. 30.10.2013 தேதி எதிரி கண்ணனை ரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்தேன். எதிரி கண்ணனை கைது செய்த பின்பு கண்ணனை சுமார் 5 நிமிடம் வாய்மொழியாக விசாரித்தேன். நான் வாய்மொழியாக விசாரித்தபோது கிராமநிர்வாக அதிகாரியும், அவரது உதவியாளரும் அங்கு இல்லை.

கிராமநிர்வாக அதிகாரியும், உதவியாளரையும் போன் மூலம் தகவல் கொடுத்து வரச்சொன்னேன். அவர்கள் வருவதற்கு சுமார் 5 நிமிடம் ஆனது. அவர்கள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்பதும், ஒன்றாக வந்தார்களா, தனித்தனியாக வந்தார்களா என்று எனக்கு நினைவில்லை. வாக்குமூலத்தை நான் கைது செய்த இடத்தில் பதிவு செய்தேன். வாக்குமூலம் நான் என் கைப்பட எழுதவில்லை. அதை யார் எழுதினார்கள் என்று எனக்கு நினைவில்லை. எதிரி கண்ணனை கைது செய்தபோது என்னுடன் எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. அதுபற்றிய விவரங்கள் வழக்கு நாட்குறிப்பில் இல்லை. பார்வை மகஜர் எழுதியதும், கண்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதியதும் ஒரே நபர் என்று சொன்னால் சரியல்ல. வெவ்வேறு நபர்கள்.

சின்னமுனியப்பன் கோவில் என்பது போக்குவரத்து நிறைந்த இடம் என்றும், இருபுறமும் கடைகள் நிறைய உள்ள இடம் என்றும், பஸ்நிறுத்தம் மற்றும் ஆட்டோ நிறுத்தும் இருக்கும் இடம் என்றும், சொன்னால் சரிதான். ஆட்கள் அதிகமாக உள்ள பகுதியில் கிராமநிர்வாக அதிகாரியை அழைத்ததிற்கு காரணம் வேறுயாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை.

நான் பொதுமக்களை சாட்சிகளாக இருக்கும்படி கேட்டேன் அவர்கள் முன்வரவில்லை என்பதை நான் எனது வழக்கு நாட்குறிபேட்டில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கண்ணனின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய சுமார் ½ மணி நேரம் ஆனது.

சின்னமுனியப்பன் கோவிலிருந்து ஜே.ஜே.கேட்வேபிளாக் என்பது எவ்வளவு துாரம் என்று உள்ளது என்று எனக்கு நினைவில்லை. மேற்படி ஜே.ஜேகேட்வேபிளாக் சம்பவ இடத்திலிருந்து எந்த திசையில் உள்ளது என்று எனக்கு நினைவில்லை. கைது செய்வதற்கு காவல்நிலையத்திலிருந்து அரசுவாகனத்தில் சென்றேன். அந்த வாகனத்தின் பதிவெண் நினைவில்லை. சிப்காட் சரளை அருகே உள்ள முட்புதருக்கு கன்னங்குறிச்சி காவல் நிலையத்திலிருந்து எனக்கு கொடுத்திருந்த ஜீப்பில் சென்றேன். அன்றைய தினம் ஜீப்பில் நான், சாட்சிகள் மற்றும் போலிசார் சென்றோம். எத்தனை பேர் என்று எனக்கு நினைவில்லை.

பொருட்களை கைப்பற்றிய இடம் பெருந்துறை சிப்காட்டில் இருந்து சுமார் அரை கி.மீ துாரத்தில் இருக்கும். கைப்பற்றுதல் மகஜர் எழுதியது என்னுடன் வந்த காவலர். பல்சர்வாகனத்தை அந்த இடத்திலிருந்து ஓட்டிகொண்டு வந்தோம். காவலர் ஒருவர் பல்சர் வாகனத்தை ஓட்டிவந்தார். பல்சர் வாகனம் கைப்பற்றியதற்கான மகஜரில் மேற்படி வாகத்தின் சாவி கைப்பற்றப்பட்டதாக எழுதப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். சேலத்திலிருந்து பல்சர்வாகனம் கைப்பற்றப்பட்ட இடம் சுமார் 50 கி.மீ துாரத்தில் உள்ளது. பெருந்துறை சிப்காட்டில் இருந்து சுமார் 7.00 க்கு புறப்பட்டோம்.

கிராமநிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளரை வரச்சொல்லி எழுத்துமூலமான தகவல் சொல்லவில்லை. வாய்மொழியாகத்தான் சொன்னேன். கிராமநிர்வாக அதிகாரியும், அவரது உதவியளாரும் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் இரவில் உருட்டு கட்டை கைப்பற்றியவுடன் பெருந்துறைக்கு கிளம்பினோம். மறுபடியும் பெருந்துறையிலிருந்து வந்தபின்பு சாட்சிகள் சென்றுவிட்டார்கள். காலை 9.30 மணிக்கு கைது செய்தவுடன் தகவல் கொடுத்தோம். அதன் பின்பு தான் சாட்சிகள் வந்தார்கள்.

கன்னங்குறிச்சி புதுஏரிக்கரைக்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 4 கி.மீ இருக்கும். புதுஏரியின் எந்த பகுதியில் எதிரி இருந்தார் என்று குறிப்பிட்டு நான்

வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி தீனதயாளன் வாக்குமூலத்தில் கன்னங்குறிச்சி புதுஏரிக்கரை என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். கன்னங்குறிச்சி புதுஏரி என்று சொல்லவில்லை. கன்னங்குறிச்சி எல்லையில் 3 ஏரிகள் உள்ளது என்று சொன்னால் ஆமாம். சுமார் 3 ஏரி உள்ளது. எதிரி தீனதயாளன் கொடுத்த வாக்குமூலத்தை நான் என் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த காவலர் எழுதினார். வாக்குமூலம் பதிவு செய்ய சுமார் 45 நிமிடம் ஆனது.

எதிரி தீனதயாளனை கைது செய்த பின்பு கிராமநிர்வாக அதிகாரி வருவதற்கு சுமார் 10 நிமிடம் ஆனது. கைது செய்த இடத்திலிருந்து எதிரி தீனதயாளன் வீடு சுமார் 4 முதல் 5 கி.மீ தூரத்தில் உள்ளது. எதிரி தீனதயாளன் எவ்வளவு பேர் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. தீனதாயன் குடியிருந்தது வாடகை வீடு. 30ம் தேதி ஜே.ஜேபிளாட் அருகில் கைப்பற்றிய உருட்டு கட்டையும், 31ம் தேதி தீனதயாளன் ஆஜர் செய்ததாக சொல்லும் மரப்பலகையும் அந்தெந்த இடத்தில் சீல்செய்தேனா என்றால் அந்தெந்த இடத்தில் சீல் வைக்கவில்லை. காவல்நிலையத்தில் தான் சீல் வைக்கப்பட்டது. மகஜரில் மரப்பலகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தீனதயாளன் வாக்குமூலத்தில் மரக்கட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவரது வாக்குமூலத்தில் மரக்கட்டைபலகை என்று சொல்லியுள்ளார்.

தீனதயாளனை கைது செய்த பின்பு காவல்நிலையத்திற்கு 12.00 மணிக்கு வந்தேன். சாட்சிகளை அனுப்பிவிட்டோம். காவல்நிலையத்திலிருந்து கன்னங்குறிச்சி ராமநாதபுரம் பஸ்டாப் சுமார் 2 கி.மீ தூரத்தில் கன்னங்குறிச்சி காவல்நிலையத்திலிருந்து அஸ்தம்பட்டி செல்லும் வழியில் உள்ளது. மேற்படி பஸ்டாப்பிற்கு அருகில் நிறைய கடைகள், வீடுகள் உள்ளது. கைது செய்யும் முன்பு எதிரிகள் 3 பேரையும் எனக்கு தெரியாது. தகவளாலி தகவல் கொடுத்தன் அடிப்படையில் கைது செய்தேன். ராமநாதபுரத்திற்கு காவல்நிலையத்தில் இருந்தபோது தகவல் கொடுத்ததால் சென்றேன்.

ராமநாதபுரத்திற்கு சாட்சிகள் வருவதற்கு சுமார் 5 நிமிடம் ஆனது. அந்த வாக்குமூலத்தை எதிரி சொல்லி நான் சொல்ல சொல்ல காவலர் பதிவு செய்தார். வாக்குமூலம் பதிவு செய்ய 1 மணி நேரம் ஆனது.

ராமநாதபுரத்திலிருந்து சாந்திநகர் பிளாட் சுமார் 1 கி.மீ துாரத்தில் உள்ளது. சாந்திநகர்பிளாட்டுக்கு அருகில் பொருள் கைப்பற்றப்பட்ட இடம் யார்வேண்டுமானலும் சென்றுவரும் இடம் என்றால் ஆமாம். அது ஒரு புதர். கைப்பற்றப்பட்ட பேண்ட் புளுகலர் ஜீன்ஸ் என்று மகஜரில் எழுதியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். ஆனால் ரசாயனபகுப்பாய்வுக்கு நான் புளுகலர் ஜீன்ஸ் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். டார்க்புரௌன்ஜீன்ஸ் டவுசர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4 வது எதிரியிடம் கைப்பற்றிய பொருட்கள் அந்த இடத்திலேயே சீல் வைக்கப்படவில்லை என்றால் ஆமாம். பொருட்களை காவல்நிலையத்திற்கு எடுத்து வந்து அங்கு தான் சீல் வைத்தோம். இவ்வழக்கில் நான் மாறுதல் ஆகி செல்வதற்கு முன்பு எதிரி தீனதயாளன் பிணையில் வந்து காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டுகொண்டிருந்தார் என்றும், ஜனவரி 2 ம் தேதி பிணையில் வந்து காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டார் என்று சொன்னால் நான் அதற்கு முன்பே மாறுதல் ஆகிவிட்டேன். எதிரிகளை கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பும் முன்பு என் அனுமதியின்றி பத்திரிக்காரர்கள் புகைப்படம் எடுக்கமுடியாது என்றால் சரிதான்.

கைது செய்யப்பட்ட பின்பு புகைப்படங்கள் பத்திரிக்கையில் வந்தால் அதுபற்றி பத்திரிக்காரர்களை தான் கேட்கவேண்டும். 01.11.2013 அன்று எதிரிகளின் புகைப்படம் தினத்தந்தி பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு செய்தி வெளியாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். ராஜாத்தியை நான் மாறுதல் ஆவதற்கு முன்பு இரண்டு முறை விசாரித்தேன். ராஜாத்தியை இரண்டாவது முறை விசாரிப்பதற்கு முன்பு சில நகைகள் கைப்பற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். ராஜாத்தியை இரண்டாவது முறை விசாரிப்பதற்கு முன்பு பணமும், நகையும் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி நகையையும், பணத்தையும் நான் சாட்சி ராஜாத்தியை அழைத்து அடையாளம் காட்டசொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மணிகண்டனிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லும் டிவி.எஸ் 50 யின் சாவியை கைப்பற்றியதாக மகஜரில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் காலை 8.00 மணிக்கு நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். பிரேதவிசாரணை அறிக்கைகளில் காலம் எண்3 இல் நேரம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ராஜாத்தியின் விபத்து பதிவேட்டை நான் பார்த்தேன். ராஜாத்தி மருத்துவரிடம் சம்பவம் காலை 8.30 மணிக்கு நடந்த விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேதவிசாரணை அறிக்கைகளில் சம்பவம் 19.10.2013 காலை 8.00 மணிக்கு யாரோ அடையாளம் தெரியாத நபர்களால் நடந்துள்ளதாக எழுதப்பட்டுள்ளது. ராஜாத்தி எனது விசாரணையில் தன்னை தாக்கியவர்களின் வயதும், அங்க அடையாளங்களையும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என்று தான் சொன்னார்.

ராஜாத்தி எனது விசாரணையில் 5 நபர்கள் இரும்பு கம்பியால் தாக்கிதாக சொல்லியுள்ளார் என்றும், வேறு ஆயுதங்கள் பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் இரும்பு கம்பி, உருட்டுகட்டை என்று சொல்லியுள்ளார். 15.11.2013 அன்று ராஜாத்தியை விசாரித்தபோது கைப்பற்றிய ஆயுதங்கள் மற்றும் பொருட்களை நீதிமன்றம் அனுப்பிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நான் சொன்ன நேரம், சொன்ன விதத்தில் முதல் தகவல்அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றும், சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரம், சொன்ன விதத்தில் 3, 4 மற்றும் 6 எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்களிடம் சொன்னநேரம், சொன்ன விதத்தில் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும், பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் ஆயுதங்களும், பணமும், நகைகளும் வழக்கிற்காக எதிரிகளை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்று என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சேலம் டவுனில் இரண்டு கொலைகள் நடந்துவிட்டதால் எங்கள் உயர்அதிகாரிகளை திருப்திபடுத்த எதிரிகளை கைது செய்து ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகளின் புகைப்படங்களை ராஜாத்திக்கு காட்டினோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த வீட்டின் ஹாலில் ரத்தகரை இருந்ததாக பார்வை மகஜரில் குறிப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

ஹாலிலோ, முன்வாசலிலோ லைட்டுகள் எரிந்து கொண்டிருந்தாக பார்வை மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் நாமக்கல்லில் குடியிருப்பவர் என்று சொன்னால் சரிதான். புகார்தாரருக்கு எப்படி தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் அவர் எந்த வாகனத்தில் வந்தார் என்று எனது விசாரணையில் தெரியவரவில்லை. புகார்தாரர் எனது விசாரணையில் எனது அண்ணன் கதவு உடைக்கப்பட்டிருந்தது, லைட் எரிந்துகொண்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் எனது விசாரணையிலும், புகாரிலும் எனது அண்ணியின் கைவிரல் அசைந்தது. அதனால் அவர் உயிருடன் இருப்பதை தெரிந்துகொண்டேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு குறிப்பாக சொல்லவில்லை. ஆனால் காயம்பட்டு துடித்துக்கொண்டு இருந்தார் என்று சொன்னார். புகார்தாரர் என் விசாரணையில் யாரோ காலை 8.00 தாக்கிவிட்டதாக பழனிசாமி தனக்கு தகவல் கொடுத்தாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

புகார்தாரர் எனது விசாரணையிலும், புகாரிலும் நான் எனது அண்ணியை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு காவல்நிலையத்திற்கு செல்லும் முன் போலிசாார் அங்கு வந்துவிட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். வாக்குமூலத்தில் கன்னங்குறிச்சி போலிசார் வந்ததாக சொல்லியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் போலிசார் வந்தார்கள் என்று சொல்லியுள்ளார். புகார்தாரர் எனது விசாரணையில் எனது அண்ணன் மற்றும் அவரது மகனை ஏதோ காரணத்திற்காக கொலை செய்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளார்கள்.

அ.சா.2 கோவிந்தராஜ் எனது விசாரணையில் நானும், அக்கம்பக்கம் இருந்தவர்களும் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து ராஜாத்தியை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினோம் என்று சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம்.

அ.சா.2 எனது  விசாரணையில் பழனிவேல் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்ததாக சொல்லியுள்ளாரா என்றால் அனைவரும் சேர்ந்து தகவல் சொன்னதாக சொல்லியுள்ளார். சாட்சி ராஜாத்தி எனது விசாரணையில் என் மகன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதால் மருந்து எடுத்துக்கொள்வார் என்று சொல்லியுள்ளரா என்றால் ஆமாம். மாத்திரை எடுத்துக்கொள்வார் என்று சொல்லியுள்ளார். ராஜாத்தி எனது விசாரணையில் கதவை உடைக்கும் சத்தம் கேட்டு ஏதோ அவசரஉதவியாக இருக்கும் என்று கதவை திறந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சத்தம் கேட்டு திறந்தாக மட்டும் சொன்னார்.

ராஜாத்தி எனது விசாரணையில் கைபேசியில் நேரம் பார்த்தபோது மணி 12.00 என்று சொல்லவில்லை என்று சொன்னால் 12.30 மணி என்று சொல்லியுள்ளார். ஆனால் போனை பார்த்து தெரிந்து கொண்டதாக என்னிடம் சொல்லவில்லை. 1 ஆம் எதிரி கையில் கத்தி வைத்திருந்தாகவோ, 6 எதிரிகளும் கையில் என்னென்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்றும் ராஜாத்தி எனது விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டுபேர் அடித்தவுடன் மயங்கிவிட்டதாகத்தான் சொன்னார்.

2, 4, 5 எதிரிகள்  எந்தெந்த ஆயுதங்களில் தாக்கினார்கள் என்று ராஜாத்தி எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜாத்தி எனது விசாரணையில் தன்னை 5 முறை போலிசார் விசாரித்தபோது எதிரிகளின் அடையாளத்தை குறிப்பிட்டு சொன்னேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 5 எதிரிகள் தான் வீட்டிற்குள் வந்து தாக்கினார்கள் என்றும் 6 வது எதிரி வாசலில் இருந்தார் என்றும் ராஜாத்தி எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

ராஜாத்தி எனது விசாரணையில் ரூ.26,000/- ரூபாய் 1000 தாள்களாக வைத்திருந்தாதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் ரூ.26,000/- என்று மட்டும் சொல்லியுள்ளார். ச.பொ.9 நகையை தவிர மற்ற எந்த நகையையும் ராஜாத்தி குறிப்பாக எனது விசாரணையில் அடையாளம் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ராஜாத்தி எனது விசாரணையில் அஞ்சலி நாமக்கல் சென்றுவிட்டதால் சமரசம் பேசியதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

விடுதலை பத்திரம் எழுதியதாகத் தான் சொல்லியுள்ளார். ராஜாத்தி எனது விசாரணையில் ஆயுதங்களின் நீள அகலம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜாத்தி எனது விசாரணையில் வீட்டிற்கு வெளியில் எப்போதும் லைட் எரியும் நான் லைட்டை போட்டுவிட்டு தான் கதவை திறந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜாத்தி எனது விசாரணையில் 2–1/2 பவுன் செயின் மற்றும் அரைஞான்கயிறு காணாமல் போனது சொல்லவில்லை என்று சொன்னால் 1–1/2 பவுன் செயின், இரண்டு மோதிரம், கணவர் அணிந்திருந்த வெள்ளி அரைஞான்கயிறு மற்றும் மகன் ராஜசேகர் அணிந்திருந்த 2 பவுன் செயின், இரண்டு மோதிரம் காணவில்லை என்று சொல்லியுள்ளார்.

ராஜாத்தி எனது விசாரணையில் இருசக்கரவாகனத்தின் பதிவு எண் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ராஜாத்தி எனது விசாரணையில் 5 வது எதிரி தனது தலையில் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கிராமநிர்வாக அதிகாரி எனது விசாரணையில் நானும், என் உதவியாளரும் காலை 8.00 மணிக்கு தகவல் கிடைத்து காவல்நிலையம் சென்றோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

கிராமநிர்வாக அதிகாரி என் விசாரணையில் ராமகிருஷ்ணனின் தம்பி புகார் கொடுத்ததாக கேள்விபட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். கிராமநிர்வாக அதிகாரி எனது விசாரணையில் பழனிவேல் எத்தனை மணிக்கு வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். கிராமநிர்வாக அதிகாரி பிற்பகல் 2.30 மணிக்கு காவல்ஆய்வாளர் சம்பவ இடம் வந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. கிராமநிர்வாக அதிகாரி எனது விசாரணையில் 4 வது எதிரியிடமிருந்து இரும்புலிவர் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

கிராமநிர்வாக அதிகாரி எனது விசாரணையில் சாந்திநகரில் பொருள் கைப்பற்றப்பட்ட இடம் முள்புதர் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். சாட்சிகளின் செல்போன் எண் வழக்கு ஆவணங்களில் இல்லை. தகவலை சொல்லி அவர்களை வரவழைத்தேன். தகவல் போன் மூலம் கொடுத்தோம். கிராமநிர்வாக அதிகாரியின் வீடு எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

கிராமநிர்வாக அலுவலகம் காவல்நிலையத்திற்கு அருகில் உள்ளது. எதிரிகளுக்கும்இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.